படிவம் – II

**அங்கீகாரச் சான்று (Certificate of recognition)**

**(விதி எண். 12 கீழ் உபவிதி 4 ஐக் காண்க)**

---

மின் அஞ்சல் : ceocpts@gmail.com                                   தொலைபேசி : 044 – 27426646

---

**செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந. க. எண். 1648 /அ1/2020          நாள்    .09.2020**

பெறுநர்

**தாளாளர்/முதல்வர்**

**ஸ்ரீ ஐயப்பா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி,**

**சோழிங்கநல்லூர்,**

**செங்கல்பட்டு மாவட்டம்.**

ஐயா / அம்மையீர்,

**பொருள் :** அங்கீகாரம் – மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல் – தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2011 மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதித்தொகுப்பின் கீழ் அங்கீகார சான்று வழங்குதல் – சார்பாக.

**பார்வை :**

1. தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதித் தொகுப்பு 1978.
2. அரசாணை (நிலை) எண். 54, பள்ளிக் கல்வித் (எக்ஸ் 2) துறை, நாள் 30.04.2002.
3. அரசாணை (2டி) எண். 48, பள்ளிக் கல்வித் (எக்ஸ் 2 ) துறை, நாள் 21.07.2004.
4. அரசாணை (பல்வகை) எண். 122, பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை, நாள் 14.09.2004.
5. அரசாணை (2டி) எண். 22, பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை, நாள் 01.06.2006.
6. அரசாணை எண். 85, பள்ளிக் கல்வித் (எக்ஸ்2) துறை, நாள் 16.06.2006
7. அரசாணை (பல்வகை) எண். 131, பள்ளிக் கல்வித் (B) துறை, நாள் 10.09.2006
8. தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம் 2006 மற்றும் விதிகள் 2012.
9. அரசாணை (பல்வகை) எண். 251, பள்ளிக் கல்வித் (எக்ஸ் 2) துறை, நாள் 17.12.2006
10. அரசாணை (2டி) எண். 24, பள்ளிக் கல்வித் (எக்ஸ் 2) துறை, நாள் 23.04.2010
11. அரசாணை (நிலை) எண். 270, பள்ளிக் கல்வித் (எக்ஸ் 2) துறை, நாள் 22.10.2012.
12. அரசாணை (2டி) .33 பள்ளிக் கல்வித் (சி1) துறை, நாள் 07.03.2013.
13. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2011.
14. தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலித்தலை ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 2009 மற்றும் விதிகள் 2009.
15. தமிழ்நாடு பொது பள்ளிக் கல்விச் சட்டம், 2010
16. அரசாணை (நிலை) எண். 175, பள்ளிக் கல்வித் (பொ.நூ)த்துறை, நாள் 20.07.2017.
17. அரசாணை (நிலை) எண். 193, பள்ளிக் கல்வித் (பொ.நூ)த்துறை, நாள் 22.08.2017.
18. அரசாணை (நிலை) எண். 101, பள்ளிக் கல்வித் (பட்ஜெட் –1) துறை, நாள் 18.05.2018.
19. அரசாணை (நிலை) எண். 167, பள்ளிக் கல்வித் (எம்.எஸ்)த்துறை, நாள் 07.08.2018.
20. புனித தோமையார்மலை மாவட்டக்கல்வி அலுவலரின் கடிதம், ந.க.எண்.2089/ஆ5/2020 , நாள். 24.09.2020.
21. தாளாளர், சோழிங்கநல்லூர், ஸ்ரீ ஐயப்பா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி கடிதம்.

-------

பார்வை 21 இல் காணும் தங்கள் விண்ணப்பத்தின் தொடர்ச்சியாக தங்கள் பள்ளியினை ஆய்வு செய்து புனித தோமையார்மலை மாவட்டக்கல்வி அலுவலரால், பார்வை 20 இல் காணும் கடிதம் மூலம் வழங்கப்பட்ட ஆய்வறிக்கையின் அடிப்படையில், **செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார்மலை கல்வி மாவட்டம், சோழிங்கநல்லூர், ஸ்ரீ ஐயப்பா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிக்கு** எல்.கே.ஜி. முதல் 8 வகுப்புகளுக்கு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 இனப்படியும் 9 முதல் 12 ஆம் வகுப்புகளுக்கு மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதித் தொகுப்பின் படியும் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு தற்காலிக அங்கீகாரம் வழங்கப்படுகிறது என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

த.பி.பா.

| பள்ளியின் பெயர் | அங்கீகாரம் வழங்கும் வகுப்புகள் | | அங்கீகாரம் வழங்கும் காலம் | | பயிற்று மொழி (Medium of Instruction) |
|---|---|---|---|---|---|
| | முதல் | வரை | முதல் | வரை | |
| ஸ்ரீ ஐயப்பா மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, சோழிங்கநல்லூர், செங்கல்பட்டு மாவட்டம். | எல்.கே. ஜி | 8 | 01.06.2020 | 31.05.2022 | ஆங்கிலம் |
| | 9 | 12 | 01.06.2020 | 31.05.2022 | ஆங்கிலம் |

மேற்படி தற்காலிக அங்கீகாரம் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டது:

1. இப்பள்ளி குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட விதிகள் 2011, ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிவகை/ காப்புரைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.
2. பள்ளியில் நுழைவு நிலை வகுப்பில், அருகாமை பகுதியில் உள்ள நலிவடைந்த/ வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவினருக்கு, வகுப்பில் மொத்த சேர்க்கையில் 25க்கு குறையாமல் சேர்க்கை செய்யப்பட்டு 8 ம்வகுப்பு முடிக்கும் வரை அவர்களுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளிப்பதை உறுதி செய்ய வேண்டும்.
3. பள்ளியில் கல்வி கட்டணத் தொகை ஈடு செய்ய ஏதுவாக "பள்ளி முதல்வர்" என்ற பதவிப் பெயரில் தனியாக வங்கி கணக்கு பராமரிக்க வேண்டும்.
4. பெற்றோர்களிடமிருந்து நன்கொடை (capitation)ஏதும் வசூலிக்கக் கூடாது. மேலும் குழந்தைகளுக்கு சேர்க்கை நிமித்தம் எவ்வித எழுத்துத் தேர்வோ/நேர்காணலோ ( Over interview) நடத்தக் கூடாது.
5. எந்த ஒரு குழந்தைக்கும், (a) பிறப்புச் சான்று அளிக்காத காரணத்திற்காகவோ, (b) சாதி, இன, மத அடிப்படையிலோ அல்லது பிறந்த இடம் அடிப்படையிலோ, வேறு காரணத்திற்காகாவோ சேர்க்கை மறுக்கப்படக் கூடாது.
6. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009, விதி 23 (1)ன்படி அரசாணை (பல்வகை) எண். 181 பள்ளிக் கல்வித் துறை, நாள் 15.11.2011ல் குறிப்பிட்டவாறு 31.03.2015ற்குள் எல்.கே.ஜி முதல் 8 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் ஆசிரியர்கள் குறைந்தபட்ச கல்வி மற்றும் தொழிற்கல்வி தகுதியுடன் ஆசிரியர் தகுதி தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும். இத்தகுதி பெறாதவர்கள் முழுத் தகுதி பெற்ற ஆசிரியர்களாக கருதப்படமாட்டார்கள்.
7. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 அதற்கான தமிழ்நாடு விதிகள் 2011 கீழ்க்குறித்த கீழ்க்காணும் காரணிகளை பள்ளி நிர்வாகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
   - (அ) சேர்க்கை செய்யப்பட்ட எந்த ஒரு குழந்தையையும் தொடக்கக் கல்வி (VIII –ஆம் வகுப்பு) முடிக்கும் வரை நீக்கம் செய்யக் கூடாது.
   - (ஆ) எந்த ஒரு குழந்தையையும் உடல் ரீதியான / மன ரீதியான துன்புறுத்தலுக்கு ஆட்படுத்தக் கூடாது.
   - (இ) தொடக்கக் கல்வி முடியும் வரை குழந்தைகளை எவ்வித பொதுத் தேர்வுகளுக்கும் ஆட்படுத்தக்கூடாது.
   - (ஈ) தொடக்கக் கல்வியினை நிறைவு செய்யும் குழந்தைகளுக்கு விதி எண். 21 (ல்) தெரிவிக்கப்பட்டவாறு சான்று அளிக்கப்பட வேண்டும்.
   - (உ) மாற்றுத் திறனாளி குழந்தைகள் / சிறப்பு கவனம் அளிக்கப்பட வேண்டிய குழந்தைகளுக்கு உரிய விதித் தளர்வுகளுடன் சேர்க்கை அளிக்கப்பட வேண்டும்.
   - (ஊ) விதி எண். 23(1) ன்படி குறைந்தபட்ச முழுக் கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்களே பணியில் அமர்த்தப்பட வேண்டும்.
   - (எ) குறைந்தபட்ச முழுக் கல்வித் தகுதி பெறாத ஆசிரியர்கள் இச்சட்டம் செயல்முறைக்கு வந்த நாளான 01.04.2010 முதல் 5 ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
   - (ஏ) விதி எண். 24 உப விதி (1)ன் கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஆசிரியர்கள் தங்கள் பணியினை மேற்கொள்ள வேண்டும். எந்த ஒரு ஆசிரியரும் தனிப் பயிற்சி (Tuition) வகுப்பு எடுத்திட பள்ளி நிர்வாகம் அனுமதிக்கக் கூடாது.
8. தமிழ்நாடு பள்ளிக் கல்வி பொதுக் கல்வி வாரியத்தால் ஒப்பளிக்கப்பட்ட பாடத்திட்டங்கள் மற்றும் அரசு ஆணை எண். 143 ப.க. (எக்ஸ் 2) துறை, நாள் 19.09.2011–ல் வரையறுக்கப்பட்ட முப்பருவ பாடமுறை மற்றும் தொடர் முழு மதிப்பீட்டு முறை பள்ளிகளில் தவறாது பின்பற்ற வேண்டும்.
9. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 சட்ட பிரிவு 19ல் தெரிவிக்கப்பட்ட வரையறை மற்றும் தரங்களை (Norms & Standards) பள்ளிகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.
10. பள்ளிக் கட்டடம், கல்விப் பணிக்காக அல்லது கல்வி திறன் வளர்ப்பு பணிகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

த.பி.பா.

ந. க. எண். 1648 /அ1/2020 நாள் .09.2020

11. தமிழ்நாடு பதிவு பெற்ற சங்கங்கள் விதி 1975ன்படி ஒரு சங்கமாகவோ அல்லது பதிவு பெற்ற அல்லது நடைமுறையிலுள்ள சட்டப்படி அமைக்கப்பட்ட பொது அறக்கட்டளையால் பள்ளி நிர்வகிக்கப்படல் வேண்டும்.
12. பள்ளி தனிநபர் இலாபத்திற்கோ, குழுக்களின் லாபத்திற்கோ அல்லது கூட்டு நபர்கள் லாபத்திற்கோ செயல்படல் கூடாது.
13. பள்ளி வரவு செலவுக் கணக்குகள் பட்டயக் கணக்காயரால் முறைப்படி ஆய்வு செய்து அதன் நகல் அதிகார பூர்வ அலுவலருக்கு அளித்தல் வேண்டும். இக்கணக்குகள் ஆண்டுதோறும் அங்கீகாரம் அளித்திட அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
14. துறையால் அவ்வப்போது கோரப்படும் அறிக்கைகள் / தகவல்களையும் பள்ளி நிர்வாகம் உடனுக்குடன் அனுப்பி வைக்கவேண்டும். பள்ளி அங்கீகாரத்தை நிறைவு செய்திடவும் / பள்ளி நடைமுறையில் எழும் சிக்கல்களை நிவர்த்தி செய்து பள்ளி தொடர்ந்து நடைபெற நிர்வாகத்தால் / அரசால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகளை பள்ளி நிர்வாகம் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.
15. இவ்வாணையில் கூறப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் , மற்றும் வரையறைகள் மற்றும் அங்கீகாரத்திற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறியதாக கண்டறியப்படும் பட்சத்தில் இந்த அங்கீகார ஆணை திரும்ப பெறப்படும்.
16. மெட்ரிகுலேஷன் விதித் தொகுப்பு விதி எண். 14 உபவிதி (3)ன்படி ஒரு வகுப்பில் அதிகபட்சமாக 4 பிரிவுகள் மட்டும் செயல்பட வேண்டும். கூடுதலாக 1 பிரிவு மாவட்டக்கல்வி அலுவலர் அனுமதி அளித்தால் மட்டும் தொடங்கப்பட வேண்டும்.
17. இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன்படி எல்கேஜி முதல் 5 வகுப்புகள் வரை ஒவ்வொரு பிரிவிலும் அதிகபட்சமாக 30 மாணவர்கள், 6 முதல் 8 வகுப்புகள் வரை அதிகபட்சமாக 35 மாணவர்கள் மட்டுமே சேர்க்கை செய்யப்பட வேண்டும். 9 முதல் 12 வகுப்புகளில் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதி தொகுப்பில் குறிப்பிட்டவாறு 50 மாணவர்கள் வரை சேர்க்கை செய்யலாம்.
18. தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணங்கள் வசூலித்தலை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2009ன்படி பள்ளிக்கு கட்டணம் நிர்ணயக்குழு நிர்ணயித்த கட்டணம் மட்டுமே மாணவர்களிடமிருந்து கட்டணமாக வசூலிக்க வேண்டும்.
19. பள்ளிகளின் பாதுகாப்பு நலன் கருதி கடைபிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள் சார்ந்து அரசு வெளியிட்டுள்ள அரசாணை எண். 131, பள்ளிக் கல்வித் (எக்ஸ் – 2) துறை, நாள் 10.09.2006–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்நெறிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும். மேலும் துறையால் அவ்வபோது வழங்கப்படும் அறிவுரைகள், நிபந்தனைகள் அனைத்தும் பள்ளி நிர்வாகத்தால் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.
20. எல்.கே.ஜி முதல் 3 வகுப்புகள் வரை தரை தளத்தில் மட்டுமே செயல்பட வேண்டும்.
21. இப்பள்ளி வளாகத்தில் இப்பள்ளி செயல்பாட்டினை தவிர வேறு கல்வி நிறுவனமோ அல்லது குடியிருப்புகளோ வியாபார நோக்கு கொண்ட எந்த கடைகளோ அல்லது வேறு எந்த நிறுவனமோ செயல்படக்கூடாது.
22. மாற்றுத்திறன் குழந்தைகளுக்காக சாய்தளம் (ramp) மற்றும் கைப்பிடிமான (handrails) வசதிகள் பள்ளி மற்றும் கழிப்பறைகளில் ஏற்படுத்தப்பட வேண்டும்.
23. இவ்வங்கீகாரம் முடிவடையும் நாளுக்கு, மூன்று மாதங்களுக்கு முன்னரே தொடர் அங்கீகாரம் கோரும் கருத்துரு உரிய அனைத்து விவரங்கள் மற்றும் இணைப்புகளுடன் கீழே ஒப்பமிட்டவருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
24. அரசாணை எண். 270, ப.க.துறை நாள் 22.10.2012ல் உள்ள அனைத்து நிபந்தனைகளுக்கு பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
25. தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம் 2006ன்படி ஒன்று முதல் 10 ஆம் வகுப்பு வரை பகுதி –1இல் தமிழ் மட்டுமே மொழிப்பாடமாக கற்பிக்கப்பட வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
செங்கல்பட்டு

30.9.2020

நகல்: மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநருக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: மாவட்டக் கல்வி அலுவலர்,
புனித தோமையார் மலை.